DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **CC 286/2024** |
| Deposition of Witness for | : | PW12 |
| Name | : | சிவா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 27.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 27th June 2025.

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் வாகைகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக இருந்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த தேதி மாதம் நியாபகம் இல்லை. 2015ம் வருடம் இரவு 9.00 மணிக்கு குற்றாலம் செல்வதற்காக சங்கரன்கோவில் வந்து கோவில் வாசல் பக்கம் டீ கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தோம். அப்போது ஜீவராஜ்ம், திலிப்பன் என்பவரும் பக்கத்து கடைக்கு டீ குடிக்க போனார்கள். அப்போது சத்தம் கேட்டது. கூட்டமாக இருந்தார்கள். அப்போது நான் போனேன். நான் போய் பார்த்தபோது ஜீவராஜ் என்பவருக்கு தலையில் காயம் இருந்தது. என்ன நடந்து என்று கேட்ட போது பைக்கில் வந்த மூன்று நபர்கள் அடித்து விட்டதாக சொன்னார். காயம்பட்ட

ஜீவராஜ் என்பவரை மருத்துவமனைக்கு சிகிச்சகைக்காக கொண்டு சேர்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

09.07.2015 ம் தேதி இரவு 9.30 மணிக்கு ஜி.வி.எஸ். லாரி சர்வீஸ் அருகே டீ கடையில் வடை சாப்பிட்டுக்கொண்டிருந்தோம் என்றால் சரிதான. அப்போது 3 பேர் வண்டியில் வேகமாக சென்றதை ஜீவராஜ் தட்டிக்கேட்டபோது எதிரிகள் மூன்று பேரும் ஜீவராஜ் பார்த்து அசிங்கமாக பேசினார்கள் என்றால் சரியல்ல. ஜீவராஜ் கழுத்தை பிடித்து நெறித்து, நகத்தால் கீரி கெல்மட்டால் தலையில் ஓங்கி அடித்தார் என்றால் சரியல்ல. சம்பவத்தை பார்த்து நான் சத்தம் போடவும் எதிரிகள் மூன்று பேரும் ஜீவராஜ் பார்த்து கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. பின்னர் விசார்த்தபோது கெல்மட்டால் அடித்தவர் முருகன் என்றும், மற்றவர்கள் முருகன் மற்றும் நவநீதகிருஷ்ணன் என்று அக்கம் பக்கம் விசாரணையில் தெரிந்துகொண்டோம் என்றும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அதற்கு மாறாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

சம்வபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் நான் முதல்விசாரணையில் கூறிய தகவல்களைதான் கூறினேன் என்றால் சரிதான்.